1981 மார்ச் 25]

திரு. பொ. உத்திராபதி : காந்தி என்று சொல்லிவிட்டேன் ; மன்னிக்க வேண்டும். இராஜாஜி அவர்கள் துவக்கிய இடம். மேலும் வேதாரண்யம் என்பது, கடலோரப் பகுதி பூராவும் அதிகமான உப்பு உற்பத்தி ஆகிற இடமாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் வேதாரண்யத்திலே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதில் மறு பரிசீலனை என்ற பிரச்சினையே இல்லை ; ஏற்கனவே பரிசீலனையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நாம் எதிர்பார்க்கிறபடி பம்பாயிலே இருக்கின்ற அந்த நிறுவனத்தினுடைய முடிவு நமக்குத் தெரிந்த பிறகு 60,000 ஏக்கரிலே பறவைகளின் தேவைக்குப் போக மீதியிருக்கின்ற பகுதியிலே நிச்சயமாகத் தொழில் ஆரம்பிக்கப்படும்.

டயர் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 485.—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வாகனங்களுக்குரிய டயர்களைத் தயாரிக்க டயர் தொழிற்சாலை நிறுவும் யோசனை உண்டா ?

(ஆ) உண்டெனில் எங்கே அமையவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு வாகனங்களுக்குரிய டயர்களைத் தயாரிக்க டயர் தொழிற்சாலை நிறுவும் யோசனை உண்டா என்று கேட்டதற்கு அத்தகைய உத்தேசம் இல்லை என்று அமைச்சரவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். தமிழகத்திலே குமரி மாவட்டத்திலேயும், இன்னும் பிற இடங்களிலேயும் ஏராளமான இரப்பர் மரங்கள் அடங்கிய இரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக லேட்டர் என்ற இரப்பர் பால் உலகத்திலேயே தலை சிறந்த இரப்பர் பால் என்று ஆய்விலேயிருந்து தெரிய வருகிறது. தற்பொழுது டயர் பஞ்சமும், விலை உயர்வும் இருப்பதால் அரசு மறு பரிசீலனை செய்து டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்க உத்தேசிக்குமா ? மீண்டும் பரிசீலிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு இரப்பர் என்ற அந்தப் பெயரிலே, தமிழ்நாடு இரப்பர் லிமிடெட் என்ற பெயரில் கூட்டுறவுத் துறை நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேலைகள் நடைபெற்று, இப்பொழுது புராஜக்ட் காஸ்ட் ஏறியிருப்பதால் அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டால் அது வயபிலாக இருக்காது, பொருளாதாரரீதியாக இலாபமாக இருக்காது என்பதால் கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் அது போன்று அரசு துவங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன மாவட்டத்திலே வேண்டுமானால் அது பொருளாதார ரீதியிலோ அல்லது வேறு வகைகளிலோ நமக்கு உகந்ததாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் கேட்பது, இரப்பர் அதிகமாகக் கிடைக்கும் குமரி மாவட்டத்திலே நூலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பனைத் தும்பு, பனை நார் ஆகியவற்றில் இரப்பரைச் சேர்த்து டயர் செய்யலாம் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த விஞ்ஞான அடிப்படையில் குமரி மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலையை அமைக்க மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், குமரி மாவட்டத்திற்கும் தொழிற்சாலை அமைக்கின்ற காஸ்டைப் பொறுத்தவரையில் பெருத்த வேறுபாடு இல்லை. வேண்டுமென்றால் குமரி மாவட்டத்தை விட இராமநாதபுரம் மாவட்டத்திலே இடம் எளிதாக, சீப்பாகக் கிடைக்கும். ஆனால் குமரி மாவட்டத்திலே மூலப் பொருள் கிடைக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இருந்தாலும் அந்தத் தொழிற்சாலை துவக்கப்பட்டால் அது எகானமிக்கலாக, வயபிலாகஇருக்காது; இலாபகரமாக நடத்த முடியாது என்ற அடிப்படையில், ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் உற்பத்திச் செலவு அதிகமாகி, பொருளாதார ரீதியில் இழப்பு ஏற்படலாம் என்றும் வயபிலாக இல்லை என்றும் கூறுகிறார்கள். இது குமரி மாவட்டத்திற்குப் பொருந்தாது. ஏனென்றால் இந்தியாவிலேயே அதிக இரப்பர் விளையக்கூடிய இடம் குமரி மாவட்டம். தேவைக்கு அதிகமான மூலப் பொருளை குமரி மாவட்டம் கொண்டிருப்பதால் உற்பத்திச் செலவு கட்டாயமாக அதிகம் வராது. ஆகவே, தொழிற்சாலை இல்லாத

1981 மார்ச் 25]

குமரி மாவட்டத்தில் அரசு வாகனங்களுக்குரிய டயர்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையைத் துவங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்ட கேள்விக்குச் சொன்ன அதே பதில் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்களின்கேள்விக்கும்என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன கல்லூரி மாணவர்களுக்கு உதவித் தொகை.

வினா எண். 374—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விடுதிகளில் தங்கிப் படிக்கும் அரிசன கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தித் தரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(முற்பகல் 10-50).

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே' பேரவைக்குக் காலம் தாழ்த்தி வந்ததற்கு என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வினாவுக்கு விடை—இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, விடுதியிலே தங்கிப் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கும் தொகையை சமீபத்தில் அரசு உயர்த்தி இருக்கிறது. அதைத் கருத்தில்கொண்டு கல்லூரிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கும் அந்த உதவித் தொகையை கூட்டிக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.